**தேதி :** 18.08.2025 **SC.No. :** 459/2024 PW :1 மகேஷ்வரி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரியும், நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். எதிரியின் அப்பாவிடமிருந்து என்னுடைய கணவர் 27.06.2008ல் பொது அதிகாரம் பெற்றார் என்றால் சரிதான். அந்த பொது அதிகாரத்தை வைத்து தான் எனக்கு என் கணவர் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி பொது அதிகாரம் எழுதிய வாங்கிய காலத்திலிருந்து என்னிடம் பிரச்சனை செய்ததாக சொன்னதை பொறுத்து எந்த நாளில், எங்கு வைத்து பிரச்சனை செய்தார்கள் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா? என்றால் இல்லை. 12 வருடமாக நான் அனுபவித்து வரும் இடத்தில் எதிரி பிரச்சனை செய்ததாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பாபு என்பவருக்கு 2021ல் கிரையம் கொடுத்த விபரம் எதிரிக்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான்.

பாபுவிடமோ, என்னிடமோ எதிரி அப்போது தகராறு செய்ததாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய கோவிலுக்கு எதிரிலும், தென்புறத்திலும் ரோடு உள்ளது என்றால் சரிதான். கோவில் அருகே என்னுடைய வீடு இல்லை என்றால் சரிதான். எதிரியின் வீடும் அங்கு இல்லை என்றால் சரிதான். அறுவடை சம்பந்தமாக ஆட்கள் அழைக்க நான் அந்த மெயின் ரோட்டில் நடந்து போய் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். மெயின் ரோட்டிலிருந்து கோவில்

இருக்கக்கூடிய கட்டிடம் 4 ஸ்டெப் உள்ள தூரம் உள்ளது. கோவில் 20 அடி தூரத்தில் உள்ளது என்றால் எனக்கு அடி கணக்கு தெரியாது. நான் தார் ரோட்டு வழியாக நடந்து போய் விடலாம் என்றாலும், கோவில் பக்கம் வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரிதான். எதிரியை நான் எவ்வளவு தூரத்தில் பார்த்தேன் என்றால் 4 ஸ்டெப் தூரத்தில் பார்த்தேன்.

நான் நடந்து சென்ற தார் ரோட்டில் வந்து எதிரி என்னை வழிமறிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வழிமறித்ததாக போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன். அறுவடைக்கு ஆட்களை சொல்லிவிட்டு வரும்போது தான் சம்பவம் நடந்தது. அம்மன் கோவில் முன்பு தான் இந்த சம்பவம் நடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். அம்மன்கோவில் அருகே ஒரு ஆலமரம் உள்ளது. வேறு மரங்கள் உள்ளதா? என்றால் வேப்பமரம் உள்ளது.

சாட்சிகள் இந்திரா, பவித்ரா ஆகியோர்கள் சம்பவயிடத்தில் நின்றதை நான் பார்த்தேனா? என்றால் முதலில் பார்க்கவில்லை. என்னுடைய சத்தம் கேட்டு அவர்கள் வந்தபோது பார்த்தேன். என்னை தாக்கப்பட்டதாக சொல்லப்படும் இடம் கழுத்தின் பின்புறமா? தோள்பட்டையிலா? என்றால் சாட்சி தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தை காண்பித்தார். சம்பவயிடத்தில் இரத்தம் இருந்ததா? என்றால் இருந்தது. என்னுடைய ஆடைகளிலும் இரத்தம் இருந்தது. யாருடைய துண்டை வைத்து கட்டினார்கள் என்று நான் போலீசார் சொல்லியுள்ளேன். என்னுடைய மகள் வந்து அவர் துண்டை வைத்து கட்டினார்.

நான் எதிரியை பார்த்ததும் ஓட முயற்சி செய்தேனா? என்றால் எதிரி என்னை வழிமறித்து பேசினார். முதுகிலிருந்து அரிவாளை எடுத்தபோது, நான் ஓட முயற்சி செய்தேன். நான் ஓட முயற்சி செய்ததாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனக்கு எப்போது சுயநினைவு வந்தது என்றால் எனக்கு வெட்டியபோது, பாதி நினைவு போனது, பின்னர் அரை மணிநேரம் கழித்து தான் நினைவு வந்தது. மருத்துவமனையில் வைத்து நினைவு வந்ததா? என்றால் வந்தது.

என்னை வெட்டியதாக சொல்லும் ஆயுதத்திலும், என்னுடைய இரத்தம் பட்ட ஆடையிலும் தலைமுடி இருந்ததாக சொல்லியுள்ளேனா? என்றால் இல்லை. தலையில் தையல் போடுவதற்கு முடியை மருத்துவனையில் எடுத்தார்கள். என்னுடைய தலையில் வெட்டும்போது தலைமுடிக்கு சேதம் இல்லை என்றால், தலை பிளந்து இருந்தது. தலைமுடிக்கு சேதம் இருந்ததா? என்று நான் கவனிக்கவில்லை. மருத்துவர் என்னை விசாரிக்கும்போது, நான் கோவில் முன்னால் வைத்து சம்பவம் நடந்ததாக சொன்னேன். ஏற்கனவே, என்னுடைய தொழில் சம்பந்தமாக ஊரில் வேறு நபர்களுக்கு எங்களிடம் பகை இருந்தது என்றால் சரியல்ல. அதனால் வேறு வகையில் என்னுடைய வீட்டில் நடந்த சம்பவத்திற்கு எதிரி என்னை தாக்கியதாக பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வெட்டுக்காயம் எதுவுமில்லை என்றால் சரியல்ல. எதிரியால் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளுக்கு இந்த சம்பவம் குறித்து தெரியாது என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி அவரை விட்டு பிரிந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

எதிரி அவருடைய பெண் குழந்தையை வளர்த்து வருகிறார் என்றாலும் அவர் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.18 18:55:50 +0530

**தேதி :** 18.08.2025 **SC.No. :** 459/2024 PW **:2** முத்து கிருஷ்ணவேணி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவகாலக்கட்டத்தில், பவித்ராவுக்கு 12 வயதிருக்கும். என்னுடைய அம்மா மீது கட்டப்பட்ட துண்டு எங்கிருந்து வாங்கினேன் என்றால் அருகில் இருந்த நபர்களிடம் வாங்கினேன். சம்பவயிடத்தில் இரத்தம் கிடந்ததை நான் பார்த்தேன் என்றால் சரிதான். என்னுடைய அம்மா காயம்பட்டு கிடந்த இடம் தார் ரோடா? இல்லை மண் தரையா? என்றால் கோவிலுக்கு முன்னால் உள்ள மண் தரையில் கிடந்தார். கோவில் மண் தரைக்கும், தார் ரோட்டிற்கும் இடையில் 20 அடி தூரம் உள்ளதா? என்றால் அவ்வளவு இல்லை. எதிரி தாக்கியதாக கூறுவது பொய் என்றாலும், வேறு யாரோ வீட்டில் வைத்து தாக்கப்பட்டதை வைத்து எதிரி தாக்கியதாக கொடுத்த புகார் மனுவிற்கு நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

போலீசார் மருத்துவமனையில் என் அம்மாவை விசாரிக்கும் போது, மருத்துவர் உடனிருந்தாரா? என்றால் உடனிருந்தார். நான் இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.18 18:56:17 +0530

**தேதி :** 18.08.2025 **SC.No. :** 459/2024 PW **:3** சந்திரா

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அம்மன் கோவில் வளாகத்தில் எத்தனை ஆலமரங்கள் உள்ளது என்றால் ஒரு ஆலமரம் உள்ளது. கோவிலுக்கு எதிரேயும், தென்புறத்திலும் மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். மெயின் ரோட்டில் வரும் நபர்கள் கோவிலின் முன்னால் வரவேண்டிய அவசியமில்லை என்றால் மெயின்ரோட்டிலிருந்து கோவில் அருகே உள்ளது. மெயின் ரோட்டிலிருந்து கோவில் 20 அடி தூரத்தில் உள்ளது என்றாலும், அங்கு ஆட்கள் வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் ஆலமரத்திற்கு அருகே எப்போது வந்தேன் என்றால் மதியம் 03.00 மணிக்கு மேல் வந்தேன். எதிரி ஏற்கனவே அங்கு நின்று கொண்டிருந்தாரா? என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 ன் வீடு என்னுடைய வீட்டிலிருந்து மேற்கே தள்ளியுள்ளது. கோவில் பக்கத்தில் எதிரியின் வீடோ, அ.சா.1 ன் வீடோ இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் அ.சா.1 மயங்கி கிடந்ததாரா? என்றால் மயங்கி கிடந்தார். நான் அழைத்தபோது "ம்ம்" என்று முனங்கினார். அ.சா.2 கிருஷ்ணவேணி சம்பவயிடத்திற்கு எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவநாளன்று நான் இந்திராவை பார்த்தேனா? என்றால் பார்த்தேன். கிருஷ்ணவேணி அ.சா.1 ஐ துண்டை வைத்து கட்டியதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி இந்திரா துண்டு வைத்து கட்டினாரா? என்றால் அந்த பதற்றத்தில் நான் பார்க்கவில்லை. வேறு யாரோ

வீட்டில் வைத்து தாக்கப்பட்டதை வைத்து எதிரி தாக்கியதாக கொடுத்த புகார் மனுவிற்கு நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவில்லை என்றாலும், எதிரியை பார்க்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.18 18:56:24 +0530